DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 98/2008

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரபோஸ் | Father's/Husband's Name : மலைச்சாமி என்ற பேயத்தேவர் | |
| Village | : – | District | : சென்னை |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 69 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2026
சாட்சி மனுவின் பேரில்மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சியாவேன். இன்று நான் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சாட்சியத்தை ஏற்று வாதி கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

| வ.எண் | தேதி | சான்றாவணம் | விபரம் | தன்மை |
|---|---|---|---|---|
| 1. | 28.08.1961 | **வா.சா.ஆ.7** | ஒத்தி வைத்த பத்திரம் | SRO நகல் |
| 2. | 12.09.1994 | **வா.சா.ஆ.8** | ஒத்தியை மீட்ட பத்திரம் | SRO நகல் |
| 3. | 20.07.1965 | **வா.சா.ஆ.9** | கிரையத்திற்கு விற்ற பத்திரம் | SRO நகல் |
| 4. | 11.01.1966 | **வா.சா.ஆ.10** | கிரையத்திற்கு விற்ற பத்திரம் | SRO நகல் |
| 5. | 14.09.1988 | **வா.சா.ஆ.11** | தானம்கொடுத்த பத்திரம் | SRO நகல் |
| 6. | 30.09.1963 | **வா.சா.ஆ.12** | 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள Written Submissions | சான்றிட்ட நகல் |
| 7. | 27.06.2026 | **வா.சா.ஆ.13** | சர்வே எண்.879, 892 மற்றும் 882 ற்குரிய புலப்படங்கள் – 3 | வலைதள நகல் |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் இன்று தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள முழு விபரங்கள் எனக்கு தெரியும். இன்று தாக்கல் செய்த ஆவணங்களில் வாதியின் பெயர்

இருக்கிறதா என்றால் இல்லை. நான் இன்று குறியீடு செய்துள்ள 1962 வழக்கில் நாங்கள் வாதியோ, பிரதிவாதியோ இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சர்வே எண்.892, 881, 880 ஆகிய சொத்துக்கள் சம்பந்தமாக நடைபெறுகிறது என்றால் சர்வே எண்.892 க்கு மட்டும் தான் வழக்கு நடக்கிறது. தாவா சொத்து மற்றும் சர்வே எண்.880, 881 ல்கட்டுப்பட்ட மொத்த சொத்தின் விஸ்தீரணம் 10 ஏக்கர் 54 செண்ட் என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3 ஆவணங்களின்படி ராசுத்தேவர் அவர்கள் மொத்தம் 10 ஏக்கர் 54 செண்ட் நிலத்தையும் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, சீனித்தேவர் தான் கிரையம் கொடுத்திருக்கிறார்.

2) ராசுத்தேவர் சர்வே எண்.880, 881 நிலங்களை அனுபவம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அவர் அந்த நிலங்களை அனுபவம் செய்யவில்லை. வா.சா.ஆ.9 கடந்த 20.07.1965 ம் தேதி தாயம்மாள், ராசுத்தேவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் தான் எங்கள் சொத்திற்கு மூல ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ராசுத்தேவர் கிரையம் வாங்கிய ஆவண எண்.4925 ஐ காட்டி தான் வாதி கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 மதுரையில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் அது எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1 வாதி கிரையம் வாங்கியுள்ள ஆவணத்தில் மூல பத்திர விபரமாக மதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த ஆவண எண்.4925 ஐ தான் காட்டப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல, வருடம் வேறு. தாவா சொத்திற்கான மூல பத்திரத்தை இன்று வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.7 சீனித்தேவர், தங்கராஜ் அவர்களிடம் ஒத்தி வைத்த பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட பிறகு தான் அசல் வழக்கு எண்.354/1961 வழக்கு சீனித்தேவருக்கும், தாயம்மாளுக்கும் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாயம்மாளிடமிருந்து ராசுத்தேவர் 40 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கியதால் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் 1961 ல் ராசுத்தேவர் 4 ஏக்கர் 80 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கினார். அதில் 3 சர்வே எண்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.880, 881 ஆகிய சொத்துக்களை 1928 ம் ஆண்டு ஜான் ஆப்ராகாமிடமிருந்து தாயம்மாளின் கணவர் கிரையம் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.354/1961 வழக்கு சீனித்தேவருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் விசாரணை நீதிமன்றத்தில் அவருக்கு

எதிராகவும், முதல் மேல்முறையீட்டு வழக்கில் சீனித்தேவருக்கு ஆதரவாகவும் தீர்ப்பு ஏற்பட்டது.

4) வா.சா.ஆ.7 ன்படி சீனித்தேவர் ஒத்திக்கு கொடுத்த சொத்தை கடந்த 12.07.1994 ம் தேதி மீட்டு 3 மாதம் கழித்து ஆவண எண்.2347 ன்படி ராசுத்தேவர், RJ டெக்ஸ்டைல்ஸ்க்கு கிரையம் கொடுத்தார் என்றால் சீனித்தேவர் தான் ஒத்தியை மீட்டார். வா.சா.ஆ.3 RJ டெக்ஸ்டைல்க்கு கிரையம் கொடுத்த ஆவணம் ராசுத்தேவர் வகையறாக்கள் தரப்பினராக இருக்கிறார்கள் என்றால் 2 லக்க சொத்துக்களுக்கு தான் மூல பத்திரம் இருக்கிறது, 2 சொத்திற்கு இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்துக்கள் ஜான் ஆப்ரகாமிற்கு பாத்தியப்பட்டு மேற்படியார் அனுபவத்தில் வந்து மேற்படியார் காலமான பின்பு மேற்படியாரின் மனைவியான தாயம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு மேற்படி தாயம்மாள் அவர்களிடமிருந்து எங்களில் 1 முதல் 4 வரை உள்ளவர்களில் 1 வது நபரின் கணவரும், 2 வது நபரின் தகப்பனாரும், 3, 4 நபர்களின் பாட்டானாருமான லேட். ராசுத்தேவர் அவர்களுக்கு கிரைய பத்திரம் எழுதி – மேற்படியார் அனுபவத்தில் வந்து மேற்படியார் காலமான பின்பு அவரின் வாரிசுகளுக்கு பாத்தியப்ட்டடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 5) வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.881 க்கு நான்குமாலாக தங்கள் நிலத்திற்கு தெற்கு, சீனித்தேவர் அவர்களால் போடப்பட்டுள்ள 12 அடி அகலமுள்ள தென்வடல் பொது நடைபாதைக்கும் சீனித்தேவர் நிலத்திற்கும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். சர்வே எண்.880, 881, 892/1, 892/2 ஆகிய சர்வே எண்களில் கட்டுப்பட்ட சொத்திற்கு தெற்கு பக்கம் சீனித்தேவர் அவர்களால் போடப்பட்ட பொது பாதை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் 3 சர்வே எண்களில் தான் தென்வடல் பாதை இருக்கிறது. CRP(MD).No.1098/2020 மனுவை நான் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான். அதில் நான் தரப்பினராக இருக்கிறேன். மேற்படி மனு ரூ.5000/– அபராதத்தோடு தள்ளுபடிசெய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சர்வே எண்.892 ற்கு வடக்கு பக்கம் சர்வே எண்.882 ல் கட்டுப்பட்ட நிலம் இருக்கிறது என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.7 ஆவணத்தில் சொத்து விபரத்தில் சீனித்தேவர் நிலத்திற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொத்து விபரத்தில் சீனித்தேவர் நிலத்திற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது

என்றால் சரிதான், அதன் சர்வே எண்.880. தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லும் தேதியில் தான் சர்வே எண்.882/2Cல் 4 ஏக்கர் 66 செண்ட் நிலத்தை எனது தாயார் பெயரில் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் ராசுத்தேவர் வகையறாவிற்கு எப்படி சொத்து கிடைத்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எனது தாயார் கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்யப்பட்ட காலாவதியான ஆவணங்களை தாக்கல் செய்து இந்த வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் செயல்படுகிறோம் என்றால் சரியல்ல. ராசுத்தேவரிடம் வாங்கிய 2 ஆவணங்களையும் உண்மையை மறைப்பதற்காக 60 ஆண்டுகளுக்குமுன்பு நடைபெற்ற வழக்கு விபரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்ப்டட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 10.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.07.10 18:19:29 +0530

District Munsif,
Aundipatti.